RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s845

OPEN ACCESS

# சல்மா மற்றும் மாலதி மைத்ரி கவிதைகளில் பெண்ணியச் சித்திரிப்பு

**மு. ருக்மணி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641029, தமிழ்நாடு, இந்தியா

# Feminist portrayal in the poems of Salma and Malati Maitri

**M. Rukmani** [a, *]

[a] Department of Tamil, Kongunadu Arts and Science College, Coimbatore-641029, Tamil Nadu, India

* Corresponding Author: profrukmaniknasc@gmail.com

Received: 29-04-2021
Revised: 02-06-2022
Accepted: 09-06-2022
Published: 09-08-2022

Check for updates

## ABSTRACT

Tamil poets have created, named, categorized, summarized and preserved dialects based on dialects in order to preserve the language they speak. Before exploring the importance of numbers in language it is necessary to know the design of grammatical literature. It is possible that the Sanskrit poets called the text grammar of the words when they recorded the language, they created in the journals so that it would be known to the world, and the textual literature of the world empirical biographies based on his linguistic ability. By learning the language of counting and writing as the body and soul direct the human being, it is possible to know through the Tamil numerals that the numbers representing the measurements are also designed while the letters are being created. The purpose of the article is to give an overview of the measurements that have taken place in human life, with descriptions of messages, numbers, and nouns. The importance of numbers has been highlighted in explaining the alphabetical order of the letters and the alphabetical alphabets created for the Tamil language under the heading of letters and numbers, as well as the design of the vowels formed with the primary letters. The use of numbers in the classification of letters by alphabetical order is illustrated by the use of numbers to distinguish vowel letters into vowel, melody, and interjection types, and to point and quote characters. The words created for measurements such as size and mass are the primary letters of the words and the reasons for giving a special place to measurements in Tamil are explained. In order to give Tamil a lofty place in the world languages in the end, there are poems in which the Tamils use their numbers to indicate the year of publication, the year of an action, the time of action, and the number of soldiers involved in the war. The conclusion of the study is outlined.

**Keywords:** Salma, Malati Maitri, Feminism, Portrayal, Tamil Female Poets

## முன்னுரை

மொழியாளுமை பெரும்பாலும் ஆண்களுக்கே உரியதாக இருந்த காலம் மாறி இன்று சரிபாதி பெண்களும் ஆளுமை செய்யத் தொடங்கிவிட்டனர். அவர்களின் பதிவுகள் கட்டுரை கதை. கவிதை என பரிமாணங்கள் பலவற்றில் குறிப்பிட்டத்தக்கதாக இருக்கின்றன. ஒவ்வொரு பெண் படைப்பாளியும் தன் எழுத்துச் சுதந்திரத்தை முழுமையாகப் பயன்படுத்தி தனக்கான சமூகத்தைக் காண விளைகின்றனர். இந்நிலையில் அவர்கள் வரையறுத்துள்ள கொள்கைகள் இலக்கியத்தில் பெண்ணியக் கோட்பாடாகக் கருதப்படுகிறது." பெண்ணியம் என்பது சமூக குடும்பத் தளங்களில் நிலவியுள்ள பால்பேதத்தையும் பெண் மீதான அடக்குமுறைகளையும்; வன்முறைகளையும் அவற்றைக் களைவதற்கான முயற்சிகளை

ஆணும்; பெண்ணும் இணைந்து மேற்கொள்வதாகும். பெண்ணை மையமாகவும் சமயத்தை சுற்றமாகவும் வைத்துக் கட்டமைக்கப்பட்டுள்ள சமூகம் காலங்காலமாக பெண்ணை இரண்டாம் நிலையிலேயே வைத்து வந்திருக்கிறது. இதன் சமூக மாற்றத்தை விரும்பிய பெண் கவிஞர்கள் தங்களுக்கான பிரச்சினையைத் தாமே எழுதத் தொடங்கினர். அவ்வகையில் சல்மா மாலதி மைத்ரி ஆகியோர் கவிதைகளில் பெண்ணியச் சித்திரிப்பை பார்ப்போம்.

## பெண்ணியச் சித்திரிப்பு

1.வாழ்க்கை நிலை 2. துயரம் 3. பயம் 4. மீட்சி 5. தன்னிலை உரைத்தல் 6. பாலியல் கொடுமை என வகைப்படுத்தப்படுகிறது. ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவான வாழ்க்கையில் பெண்ணை மட்டும் தனியாகக் காணும்போது சமூக ரீதியாகப் பல பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கின்றனள். இதனை பல கவிதைகள் எடுத்துக் காட்டுகின்றன.

## வாழ்க்கை நிலை

மனிதன் தோன்றிய காலம்தொட்டே பெண்ணை மதித்தும் வணங்கியும் வந்திருக்கிறான். பெண் தாயாகவும் தாரமாகவும் நின்று ஆணின் வளர்ச்சிக்குத் துணைநிற்கின்றாள். தாயொருத்தி கருக்கொண்டதிலிருந்து தன் குழந்தையை எப்படியெல்லாம் வளர்க்க வேண்டும் எதிர்காலத்தில் குழந்தைகள் என்னவாக இருக்கவேண்டும் என எண்ணத் தொடங்கி விடுகிறாள். வளர்கின்ற போது பற்பல அறிவுரைகளைச் சொல்லுகிறாள். சமூகம் கட்டமைத்திருக்கின்ற ஒழுக்கங்களைக் கற்பிக்கின்றாள். நல்லவைகளையும் அல்லவைகளையும் பிரித்து இனங் காணச் செய்கிறாள். பிறர் தன் மகனை "சிறந்தவன்" எனச் சொல்லும் போது பெற்ற போது இருந்த மகிழ்வை விட பெருமகிழ்வு எய்துகிறாள். இவ்விடத்தில்

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் இவ்விடத்து

சான்றோன் எனக் கேட்ட தாய்"

என்னும் குறளும் குறிப்பிடத்தக்கது (Parimelalhagar, 2002). மனைவியானவளும் குடும்பத்தில் முக்கியமான இடத்தைப் பெறுகிறாள். கணவனின் பெருமைக்கு மனைவியும் காரணமாக இருக்கிறாள். புகழை விரும்பிய மனைவியைப் பெறாதவர்க்குத் தம்மை இகழ்ந்து பேசும் பகைவர் முன் சிங்க ஏறுபோல நடந்து செல்லும் பெருமித நடை இல்லை என்கிறார் வள்ளுவர். "பெண்ணே ஆணை ஊக்குவிக்கும் சக்தி. மனிதன் உயர்ந்த ஊக்கங்களுக்கு அவளே விளக்கு. அவளுக்குத் தன்னைக் காத்துக் கொண்டு மற்றவர்களையும் காப்பாற்றும் திறம் உண்டு. உண்மை அன்பு நீதி சமயத்துவம் சகோதரத்துவம் போன்ற அனைத்தையும் விளங்கிக் கொள்ளும் ஆற்றல் இயல்பாகவே பெற்றவள்" இத்தகையவளின் வாழ்க்கை நிலை ஒருபுறம் ஆணுக்கு நிகராக வளர்ச்சி அடைந்திருந்தாலும் இன்னொருபுறம் சமூகக்கட்டமைப்புக்குள் சிக்கித் தவிப்பதாகவே இருக்கிறது (Sivagama Sundari, 2005).

ஆண் பெண் இருபாலருமே உணர்வு வயப்பட்டவர்கள். ஆண் வெளிக்காட்டுவது போல பெண் வெளிக்காட்டுவதில்லை. வெளிக்காட்டவும் முடிவதில்லை. அதற்கு சமூகமும் அனுமதிப்பதில்லை. மென்மை உறுதி நேசம் பாசம் காதல் கவித்துவம் உணர்வுப் பிரளயம் என எல்லாவற்றையும் தனக்குள்ளாகக் கொண்டிருக்கும் பெண் இவற்றுள் எதையும் ஆண்(கணவன்) அறிந்து கொள்வதில்லை என்ற கருத்து வெளிப்பாட்டை

"என்னைத் தழுவிச் செல்லும்

தென்றல் அறியும்

எனது மென்மை

என்னைச் சிதைத்து அழிக்கும்

வாழ்க்கை அறியும்

எனது உறுதி

நான் அணைத்து வளர்க்கும்

குழந்தை அறியும்

எனது நேசம்

என்றாவது வரும்

மழை அறியும்

என்னுள் இருக்கும் கவிதை

பனிபடர்ந்த

புற்கள் அறியும்

எனது காதல்

எனது கவிதைகள் அறியும்

எனது பூகம்பங்கள் அறியும்

என்னை

எப்போதும்

அறிந்ததில்லை நீ

எனக்கு நேர்ந்த

எதையுமே"

என்னும் கவிதையில் காணமுடிகிறது. பெண்களுக்கு உடைய மென்மையைத் தென்றலும் உறுதியை வாழ்க்கையும் நேசத்தை குழந்தையும் கவித்துவத்தை மழையும் காதலை பனிப்புல்லும் உணர்ச்சி பிரளயத்தை பூகம்பத்தை பூகம்பமும் அறிந்து வைத்திருக்கிற போது இவற்றில் எதையுமே (அறிந்து இருக்க வேண்டியவன்) ஆண் அறிந்துகொள்ளாமல் இருக்கின்ற அவலம் இங்கு கட்டபட்டு இருக்கிறது (Salma, 2015).

உரிமை என்பது உயிர்ப்பிறப்போடு உடன் பிறப்பதுஇ விலைக்கு வாங்கப்படுவது அல்ல. ஒருவர் கொடுப்பதும் இல்லை. மற்றவர் வாங்குவதும் இல்லை. எந்தக் கட்டுப்பாடுகளுக்கும் அடிமையாகாது தானே சிந்தித்து தன் உணர்வுகளைத் தானே மதித்து மற்றவர்களும் மதிக்க வாழ்வதுதான் உரிமையாகும். உரிமையை யாருக்காகவும் எதற்காகவும் விட்டுக் கொடுக்கக்கூடாது. சரிசமமாக நடத்தப்படும் முறைதான் உரிமையாகும் (Sivagama Sundari, 2005).

இவ்வுரிமைப் பயன்பாடு இன்று எல்லா பெண்களிடத்திலும் இருக்கிறதா? என்றால் இல்லை என்றுதான் கூறமுடியும். ஆணின் கோபத்திலிருந்தும் கொடுமையிலிருந்தும் தப்பித்துக்கொள்ள சில நேரம் பெண் பொய் சொல்லியே ஆக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விடுகிறாள். இதை

"எல்லா இடத்திலும்
பொய் சொல்ல வேண்டியிருக்கிறது
கண்ணாடியில்
சிரிக்கும் பொழுதும் கூட"

என்னும் கவிதை வெளிப்படுத்துகிறது. சொல்லப்பட்டது பொய்தான் என்று கண்டுபிடிக்கப் பட்டால் சொல்லப்பட்ட சூழலையும் தேவையையும் எண்ணிப்பார்க்காமல் அவளை அடித்து வதைக்கின்ற ஆணின் செயலையும் இன்றைய சமுதாயத்தில் காணமுடிகிறது (Salma, 2015).

வாழ்க்கை அமைப்பில் பெண் வேறுபட்டவளாக இருக்கிறாள். ஆண் ஓரே இடத்தில் வாழ்பவளாகவும் பெண் பிறந்த மற்றும் புகுந்த இடங்களில் என இரண்டு இடங்களில் வாழ்பவளாகவும் இருக்கிறாள். இதனாலேயே பெண்ணை தவளையோடு ஒப்பிடுவர். தவளை நீரிலும் நிலத்திலும் வாழ்வது போல பெண் இரண்டு இடங்களில் வாழ்கிறாள் என்பது மக்களின் பேச்சு வழக்கில் காணப்படும் ஓர் ஒப்பீட்டுப் பார்வையாகும். பெண்ணொருத்தி மணமுடித்து புகுந்த வீட்டில் வாழ்ந்தாலும் பிறந்த இடத்தின் நினைவு வெளியைவிட்டு அவள் வெளிவருவதில்லை. சான்றாக பெற்ற குழந்தையைத்தாய் தாலாட்டுகின்ற போது தான் பிறந்த இடத்துப் பெருமைகள் பேசுவதைக் கூறலாம். இத்தகைய வாழ்வை சல்மா

"நீ கொண்டுவந்த பூச்செடிகள்

தொட்டியில் நடப்பட்டு

நீரூற்றிய பின்னும்

தலை சாய்த்துக் கொண்டிருக்கின்றன.

எப்பொழுதும் அது

தன் தோட்டத்து வெளியை விட்டு

வருவதில்லை.

தன்னை இங்கு

ஊன்றிக் கொள்கின்ற ஒரு வேரை

வெளிப்படுத்துவதுமில்லை"

என்னும் கவிதையில் குறிப்பிடுகிறார் (Salma, 2015). பெண் கவிஞர்களின் கவிதைகள் மொழி சுதந்திரம் உரிமை போன்றவற்றை முன் வைக்கின்றன. கொச்சை மொழி என்று ஒதுக்கி வைக்கப்பட்டு இருந்தவையும் அவற்றில் எடுத்தாளப்படுகிறது. நேரடியாக கருத்தை முன் வைக்காமல் இயற்கை மற்றும் விலங்குகள் சார்ந்த படிமங்களாகக் காட்டப்படுகின்றன. பெரும்பாலும் பெண்ணின் இயல்புக்கு தீ சூறாவளி புயல் பூகம்பம் போன்றவை படிமமாக்கப்படுகின்றன. இதே போன்று பச்சை வண்ணம் விடுதலைக்கும் சிவப்பு வண்ணம் புரட்சிக்கும் காட்டப்படுகிறது. பெண் தனக்கான கருத்தை முன்வைத்து புரட்சி செய்யத் துவங்கிவிட்டால் பெரும் கிளர்ச்சியே ஏற்பட்டு விடும் என்பது பெண்ணிய கவிஞர்களின் கருத்தாக இருக்கிறது. சான்றாக

"தனது சிவப்பு முந்தானையை

காலடியில் புரளவிட்டு சுழல்கிறாள்

கலவையான ஆட்ட அசைவுகளின் பாவங்கள்

வழியற்றுக் குவிந்த வாகனவாசிகளை

மிரளவைக்கின்றன" என்னும் கவிதையில் நெடுஞ்சாலையில் நிகழும் சூறாவளி பெண்ணின் புரட்சிக்கு படிகமாக்கப்பட்டு உள்ளதைக் கூறலாம் (Malathi Maithri, 2010). இதனால் இன்றைய பெண்களின் வாழ்வு அவர்களே போராடிக் கொள்வதனை நிலையில் இருப்பதை கவிதை அறிய முடிகிறது.

## துயரம்

தாமரை இலையில் ஒட்டியிருக்கும் நீர் ஒட்டி இருப்பது போன்ற தோற்றத்தில் இருந்தாலும் ஒட்டாமல் இருப்பது போல பெண் கணவனோடு குடும்பம் நடத்துகின்ற போது பிறந்த வீட்டுச் சுதந்திரம் இல்லாதவளாகவே இருக்கிறாள். புகுந்தவீடு எல்லா வசதிகளையும் உள்ளடக்கியதாக இருந்தாலும் பிறந்த வீட்டு சௌகரியம் அங்கு இல்லை என்பதாகவே உணர்கிறாள். குடும்பத்தில் இருக்கும் ஒவ்வொருவருக்குத் தக்கபடியும் தன்னை மாற்றிக் கொள்ளும் புகுந்த வீட்டுப் பெண்ணை சில

வீடுகளில் புரிந்துகொள்வதில்லை. நல்லதே செய்தாலும் அதைக் குற்றம் சுமத்தும் மாமியார்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு வாழ்வை "ஆதிகாலக் குகை" என்றும் அதிலிருந்து வெளியேறவும் முடியவில்லை என்றும் கவிஞர் கூறுகின்றார்.

"எனக்குத் தெரியும்

எனதிந்தக் காரியங்களையும்

ஓயாத பறத்தல்களுடன்

குழந்தைகள் மீளுமுன்

முடிக்க வேண்டுமென்பதும்

இருந்தும்

இன்னும் கூட நிகழவில்லை

இது எனது இடமென்கிற பிடிமானமும்

ஆதிகாலக் குகைவெளிலிருந்தேன்'

வெளியேற்றட்டும்" என்னும் கவிதையால் வீட்டின் நிருவாகம் எல்லாம் தெரிந்தவளாக இருக்கும் பெண்ணின் இருவேறு மற்றும் வாழ்வின் பிடிமானம் இல்லாத மனநிலையையும் அவள்படும் துயரத்தையும் அறிய முடிகிறது (Salma, 2018).

## பயம்

குடும்ப மற்றும் சமூகக் கட்டமைப்புக்குள் கட்டுண்டு கிடக்கும் பெண் அதிலிருந்து வெளியேறி தனக்கான சுதந்திரத்தை வரையறுத்துக் கொள்ளும் முன் மனச்சோர்வடைகிறாள். இதனால் பயமே உருவாகிறது. பெண் அதிக அளவில் மனச்சோர்வுக்கு உள்ளாதவற்கான காரணிகள் குறித்த பல கோட்பாடுகள் உள்ளன. அவற்றில் ஆரம்பகால கிரேக்க தத்துவத்தின் கோட்பாடானது "பெண்கள் பலவீனம் உள்ளவர்கள் என்ற கருத்தைச் சுட்டுகிறது. ஆனால் தற்கால சமூக அறிவியல் மற்றும் பெண்ணிய ஆய்வுகள் இத்தகைய சிந்தனை தவறு என நிரூபித்துள்ளன. மனச்சோர்வு என்பது ஒரு சிக்கல் நிறைந்த உணர்ச்சி நிலை. அது தொடர்பான ஆய்வுகள் சிக்கல் நிறைந்த காரணிகளை உட்கிரகிப்பதில் ஆரம்ப நிலையிலேயே உள்ளன. மனச்சோர்வு தனிநபர் செய்யும் தவறாலேயே வரும் என்பதை ஆய்வு மறுத்துள்ளது. மேலும் மனச்சோர்வு என்பது ஒரு நன்னடத்தைப் போக்கால் உருவானதல்ல என்றும் அது பெண்கள்pன் வாழ்க்கையில் எதிர் விளைவுகளை உண்டு பண்ணியிருக்கின்றது என்றும் தற்கால அணுகுமுறைகளில் கண்டறியப்பட்டு உள்ளன (Nirmalarani, 2008)." என்பதால் மனச்சோர்வே பெண்ணுக்கு பயத்தை ஏற்படுத்துகிறது எனலாம்.

"குளியறையின்

தனிமை ஏற்படுத்துகின்றது

நிர்வாணம் பற்றிய

அருவருப்பின் பயம்

கூண்டுகளுள் எழும்பிய

வீடுகள் தமது எதிர்பார்ப்பினை

அதிகரிப்பதன் நோக்கம்

என்னை பயமுறுத்துவது மட்டுமே" என்னும் கவிதை பெண்ணுக்கு பயம் உருவாகும் சூழலை தெளிவாகக் காட்டுகிறது (Salma, 2018).

## தன்னிலை உரைத்தல்

வாழ்வின் வெற்றி நிலையை அடைய முடியாதவர்கள் "போராட்டம் நிறைந்தது வாழ்க்கை" என விமர்ச்சி; கின்றனர் சமாதானங்களாலும் ஆறுதல்கள் கூறுதலாலும் வாழ்க்கை குப்பைத் தொட்டியாகிறது என்கிறார் கவிஞர்.

"சமாதானங்களாலும்

ஆறுதல்களாலும்

இட்டு நிரப்பப்படும் வாழ்வு

ஒரு குப்பைத் தொட்டியாகிறது" என்னும் வரிகள் ஆறுதலை முன்வைக்கின்றன (Salma, 2015). மனக்குழப்பத்துடன் அல்லாடிக் காலத்தைக் கழித்துக் கொண்டிருப்போர்க்கே சமாதனமும் ஆறுதலும் தேவைப்படுகிறது. அது எவர்க்குத் தேவைப்படுகிறதோ அவருடைய வாழ்வு குப்பைத் தொட்டியாகும் என்பது கவிஞரின் கருத்தாக இருக்கிறது. மேலும் இவ்வாழ்வில் துக்கம் கண்ணீர் வேதனை வெறுமை ஆகியவற்றில் இருந்து விடுபடுவதற்கு ஒரே வழி மரணம் மட்டுமே என்கிறார்.

"இந்த மண்

என்னை மூடும் போது

மிக இயல்பாய் இருப்பேன்" என்னும் வரிகளில் மரணித்து மண்ணால் மூடும்போதும் இயல்பாகவே இருப்பேன் என்பதால் பிரச்சினைகளுடன் வாழும் பொழுது இயல்பாக இருக்கும் தன்னிலையைக் காணமுடிகிறது (Salma, 2015).

## மீட்சி

போராடி மீட்சியைக் காணும் தன்மையை கவிஞர்.

"கடல்மீது ஒரு பறவை

தனது பழைய தீவைத் தேடிச் செல்கிறது

தீவு இதுவரை அறிந்திராத

புதிய தானியத்தை விதைக்க

ஆலகில் முற்றிய கதிரோடு

முண்வாசனையை ஞாபகம் கொண்டு

பறவைக்கும் தீவுக்குமிடையே

ஆறாத கதிரொளி" என்னும் கவிதை வரியிலும் வெளிப்படுத்தி இருக்கிறார் (Malathi Maithri, 2010). கடல் உலகிற்கும் பறவை பெண்ணிற்கும் புதிய தானியம் மீட்சி குறித்த புதிய சிந்தனைக்கும் குறியீடாயின எனலாம். இது போன்றே தீவு மீட்சிக்கும் கதிரொளி ஆண் சமூகத்தின் இடர்பாட்டிற்குமான குறியீடு எனலாம்.

மீட்சியாகிய விடுதலை வேண்டி போராடும் ஒவ்வொரு முறையும் ஆண் சமூகம் தடையாக இருக்கிறது. இருந்தும் உலகமாகிய கடல் மீது பறவையாகிய பெண் மீட்சியாகிய தீவு நோக்கி புதிய தானியமாகிய புதுச் சிந்தனையுடன்பறந்துகொண்டிருக்கும் தன்னிலையை கவிஞர் இக்கவிதையில் வெளிப்படுத்தி இருக்கிறார்.

## நாளைய பெண் சமூகம்

இன்றைய பெண்களும் மீட்சிக்காகப் போராடுதல் தனக்காக இல்லாவிட்டால் நாளைய பெண் சமூகத்திற்குப் பயனாக அமையுமே என்ற நோக்கில் அமைகிறது எனலாம். "நிகழ்காலப் போராட்டமே

எதிர்காலம் சுதந்திரம்” என்னும் பொன்மொழி இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

“வீறல் கண்ட வானம்

உதிர்ந்து கொண்டிருக்கிறது

இத்தனை பெரிய ஓட்டிற்குள்ளாகவோ

இருக்கிறேன்”

என்னும் வரிகளில் தன்னைச் சுற்றியிருக்கும் அடக்குமுறைகளைக் கண்டு பெண் அதிர்ச்சியடைவதாகப் படுகிறது (Malathi Maithri, 2010). இந்த அடக்குமுறைகளுக்கு உள்ளாகப் பிரசவமாகும் பெண் தன் குழந்தை சிறகுடன் பிறப்பதாகக் கூறுகிறாள்.

“ஈரமான சிறகுகளோடு

என் குழந்தை

எனது அடிவயிற்றில்

அதன் ஒரு பக்கச் சிறகை

விரித்து உரசுகிறது

உண்மையாகவே:” என்னும் வரிகளில் அடக்குமுறைக்குள் இருக்கும் தனக்கு சிறகுகளுடன் பிறந்த குழந்தை நாளை சுதந்திரமாக பிறக்கும் என்று கவிஞர் காட்டும் பெண் தன் மீட்சி குறித்த நிலையை வெளிப்படுத்துவதாகக் கொள்ளலாம் (Malathi Maithri, 2010).

## பாலியல் கொடுமை

“வஞ்சம் படர்ந்த

நகரத்தின் தெருக்களில்

வெப்பம் மிதந்தலையும்

பேருந்தில்

வியர்த்து வழியும் உடல்களினூடே

எங்கோ துளிர்த்துப் பெருகிய வன்மமென

என்மீது நீளும்

ஓர் ஆண்குறி

என்னும் கவிதையில் சிலர் நிகழ்த்தும் பாலியல் கொடுமையினை எதார்த்துமாகப் பதிவு செய்திருக்கிறார் கவிஞர். இதனால் மிகவும் கேவலமான களையப்பட வேண்டிய மனிதர்கள் இச்சமூகத்தில் இருப்பதை அறியமுடிகிறது” (Salma, 2015). இவர்களால் ஒட்டு மொத்த சமூகத்திற்கும் அவப்பெயரே ஏற்படுகிறது எனலாம்.

## முடிவுரை

மேற்கண்ட கவிதைகள் மூலம் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவான வாழ்க்கையில் பெண்ணைத் தனித்துக் காணும் போது பல பிரச்சினைகளில் சிக்கி இருக்கிறாள். ஆண் தன் உணர்வுகளை வெளிக்காட்டுவது போலப் பெண் காட்ட முடிவதில்லை. சமூகமுகம் அனுமதிப்பதில்லை. மனைவியின் உணர்வுகளைப் புரிந்துகொண்டவனாகக் கணவன் இருப்பதில்லை என்னும் கருத்தைப் பெற முடிகிறது. ஆணின் தாக்குதலில் இருந்து விடுபட பெண் பொய் சொல்ல வேண்டிய நிலை

ஏற்படுகிறது. எள்ளிய நகையாடலையும் காணமுடிகிறது. தனக்கு விடுதலை பெறவருகிற பெண் சமூகத்திற்கு விடுதலை வேண்டும் என்ற நோக்கில் பெண்ணியச் சித்திரிப்பு கவிதைகளில் நிகழ்த்தப்பட்டு இருக்கிறது. பெண்களுக்கு இழைக்கப்படும் பாலினக் கொடுமைகள் மிகவும் எதார்த்தமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. ஆணின் அனைத்து விதமான அதிகாரத்திற்கும் ஆதிக்கப்போக்கிற்கும் பெண் ஆளாக்கப்பட்டு இருப்பதை பெரும்பாலான கவிதைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

## References

Malathi Maithri, (2010) Neerindri Amayathu Ulagu, Uma Pathippagam, Chennai, India.

Nirmalarani, (2008) Penniya Thiranaaivu, New Century Book House, Chennai, India.

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Salma, (2015) Pachai Devathai, Kalachuvadu Publication, Nagercoil, India.

Salma, (2018) Oru Malaiyum Ennoru Malaiyum, Kalachuvadu Publication, Nagercoil, India.

Sivagama Sundari, (2005) Penniyamum Veeramum, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License